Registered as a News Paper in Ceylon P. M. G. No H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ. ஆரம்பமானது;

# இந்துசாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு மாசிமீ உஉ வெள்ளிக்கிழமை (14 February. 1964) [இலக்-சகூ]

## தெவிட்டாது தித்திக்கும் திருவருள்என்னும் தேன்

சைவப்புலவர் செல்வி. சி. சின்னத்தம்பு அவர்கள்

தேன் தித்திப்புடையது; தெவிட்டாதது; நோய்க்கு மருந்தாகவுள்ளது; இருதயத்திற்குப் பலத்தைக் கொடுப்பது. இவை மட்டுமா அதன் சிறப்புக்கள்? அது தூயபொருளாம் மலரிலிருந்து பெறப்படுவது; அத்துடன் பாலர் தொடக்கம வயோதிபர்வரை யாரும் அள்ளிப்பருக ஆசைப்படும் பொருள். பாலோ இனிமையுடையது; சுவையுடையது; ஆனல் அதுவும் பருகப்பருகப் புளிக்குமாமே! தேனைப் பற்றியோ யாரும் பருகப் பருகப் புளிக்குமென்று கூறியதாக இல்லை. அது பருகப்பருகத் தெவிட்டாதது. இதனுலேதான் மெய்ப்பொருளாம் செம்பொருளின் அருளைத்தேன் என்று மெய்யடியார் பலர் பாடியுள்ளனர் போலும்!

வேண்ட முழுதும் அருளும் ஆண்டவன் வேண்டத்தக்கதையும அறிவானன்றே? நாம் அவனிடம் வேண்டத்தகக தென்ன? எம் துன்பமெல்லாம நீக்கி எமமை ஆட்கொள்ளுதற்கே வேண்டுதல் வேணடும. நாம் அப்படி வருந்தி வேண்டத் துன்பம நீங்கும. அப்பாற் கிட்டுவது இன்பம்; பேரின்பம். பேரின்பம், அதுதான் தித்திக்குந் தேன். இறைவன் உருவே பேரின்பம். அதை எமக்குச் சொரியத் துணையாயுள்ளது அவருடைய பேரருட் சத்தி. எண்குணத்தையும் பொருந்தியுள்ள பெருமான் குணி; அவரிடமிருந்து இனபத்தைப் பெற்றுத் தருபவள் குணமாம் சத்தி. இப்பேரருளாம் இன்பத்தை நாம் நுகரும்பொழுது, ஏனைய இன்பங்களைப்போல் இடையில் வெறுப்பேற்படாது, மேலும் மேலும பருக ஆசையுண்டாகின்றது. இதனுல் தித்திப்புடையது தெவிட்டாதது திருவருட் டேனன்றே?

இன்னும் தேன் எவ்வாறு நோய்க்கு மருந்தாகபபடுகின்றதோ, அவ்வாறே மலநோயால் பீடிக்கப்பட்ட ஆன்மாவுக்குப் பேரின்பத் தேனுக ஊறெடுக்கும் அண்ணல அருள், மருந்தாக அமைகின்றது; ஆத்மீக ஞானத்தை வளர்க்கின்றது; மலததைக கெடுக்கின்றது. இதனுலும, இறைவனின் பேரருட்டன்மையும் தேனின் தன்மையும் ஒத்திருப்பதை நாம் காணலாம். மேலும் கடவுள் தூயவுடம்பினன். அவனிடமூற்றெடுக்கு மருள் தூயமலரிலிருந்து பெறப்படும் தேனனையது; எல்லோராலும் வருந்திப் பெறத் தக்கது; பேணிப் போற்றததக்கது; விரும்பி நுகரத்தக்கது.

இத்தகைய பேரின்பச் செல்வமாம் சிவபெருமானைப்பற்றி, அவர் அட்கொண்டு ஆனந்தமளித்த அடியார் கூறியவற்றை நோக்குவாம். அப்பர் சுவாமிகள் திருவாவடுதுறைத் தேவனை விழித்துப் பாடுந் தந் திருத்தாண்டகத்தில்

"திருவே! என்செல்வமே! தேனே வானேர் ....... என்கின்ருர். இத்திருத்தாண்டகத்தில் இறைவனை அவர் தேனே! என்றுவிழிப்பதை நாம் அறிய முடிகின்றது. இன்னும் அன்பு வள்ளல் மாணிக்கவாசகர் நெஞ்சு நெக்குருகப்பாடுந்தமது திருவாசகத்தில் இன்பப்பொருளாம் இறைவன், தன் குழவியை நினைந்து பாலைச் சொரிந்தூட்டுகின்ற அன்னையிலும் பரிந்து அளவற்ற ஆனந்தமாய தேனுகிய அருளைச் சொரிகின்ருன் என்பதை:-

"பால்நினைந் தூட்டுந்
தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி
உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து ... ...

என்றும், இன்னுமோர் இடத்தில்,

"தேறலின் தெளிவே
சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை
சிவனே ... ...

என்றுங் கூறுகின்ருர்.

மேலும், திருவிசைப்பாவால் இறைவனை அர்ச்சித்த திருமாளிகைத்தேவர்,

"ஒளிவளர் விளக்கே
உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர்
உணர்வே
தெளிவளர் பளிங்கின்
திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்குந் தேனே!

என எல்லாம்வல்ல எம்பெருமானை இறைஞ்சுவதை நோக்கின் மெய்ப்பொருளின மெய்யடியார்கள் இறைவனை, அவன் அருட்சத்தியை அதனுல் நாம் அடையும் பேரின்பப் [illegible]

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

### நற்சிந்தனை

இரவுபக லற்றதனி
யேகாந்தக் காட்சி
விரவுமவ ரேபெரியோர்
மேவு.

### நாவலர் நல்வாக்கு

❁ நாடோறுந் தருமஞ் செய்க

ஆன்மாக்கள் சரீரத்தை விட்டு நீங்கும்பொழுது அவர்களுக்கு உண்டாகும் அச்சமும துன்பமும் சொல்லலாகுமா! அப்பொழுது தங்கள் வீட்டையும் தனதானியங்களையும் நினைத்துநினைத்து 'இனி இவைகளை யாவர் அனுபவிப்பர்! நாம் உடலை வட்டுப் பிரியும்பொழுது இவைகளெல்லாம் நமக்கு அன்னியமாகுமே' என்று எல்லையில்லாத மனத் துயரம் மேலிட, இறப்பர்கள். ஆன்மாக்கள் இறக்கும் பொழுது படுந் துன்பம், பாம்பு தன்வாயினுலே பற்றும்பொழுது தவளை படுந் துன்பத்துக்குச் சமமாகும். அப்பொழுது பிதாமாதாப் பெண்டிர் பிள்ளைகள் முதலாயினேர் அவர்களைக் காக்க வல்லவர்களோ? இல்லை இல்லை! அவர்கள் எண்ணில் காலட் வருந்தித் தேடிய திரவியங்கள் அவர்கள் போம்பொழுது துணையாகுமோ! இல்லை இல்லை! அவர்களுக்கு அழியாத் துணையாய் உடன் செல்வது அவர்கள் செய்த புண்ணியமே!

ஆதலினுலே, யாவரும் பேசக்கூடாவண்ணம் நாக்கை அடக்கி விக்கல் எழுவதற்கு முன்னே இத்துணைச் சிறப்பினதாகிய புண்ணியத்தை விரைந்து செய்தல் வேண்டும். விக்கல் வந்தபொழுது புண்ணியத்தைச் செய்தலேயன்றி, அங்குள்ளார் பிறரை நோக்கி 'நீங்கள் நம்முடைய பொருளைத் தருமத்திலே செலவிடுங்கள்' என்று சொல்லவும் முடியாதே. அவ்விக்கல் தான் இன்னபொழுது வருமென்பதுந் தெரியாதே. ஆதலினுலே, இறக்கும் பொழுது செய்வோம என்று நினையாது புண்ணியத்தை நாடோறுஞ் செய்தல் வேண்டும்.

## சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் 1964 ஆடி ஆவணித் திங்களில் நடாத்தப்பெற விருக்கும் இளஞ் சைவப் புலவர் சைவப்புலவர் பரீட்சைகளுக்காய 'பரீட்சை விதிகளும் பாடத் திட்டமும்'' தேவையானவர்கள் 25 சதம் பெறுமதியான முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக்கோள்ளலாம்.

விண்ணப்பிக்கும் முகவரி:-
பரீட்சைக் காரியதரிசி,
சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: விண்ணப்பத் தாள்களைப் பங்குனி மாதத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

உமாபதிசிவாச்சாரியார் அருளிச்செய்த

## கொடிக்கவி

[ சைவப்புலவர் திரு இ. செல்லத்துரை அவர்கள் ]

(முற்ருெடர் — 7)

7. கொடிகட்டினேன்:-

கோயிலிலுள்ள கொடிமரம் பதியையும், அதைச் சுற்றி ஏறும் கொடிச்சீலையும், அதில் எழுதிய இடபமும் பசுவையும், அச்சீலையைப் பற்றி நிற்கும தருப்பைக் கயிறு பாசத்தையும், கொடிச்சீலையினகத்தே இருக்கும மஞ்சள் நூல் பசுவுக்கு (உள்) உயிராய் நின்று தெளிவிப்பதாகிய திரோதான சத்தியையும் குறிப்பன.

'உயிர் பாசப்பற்றை நீக்கி, அருள்வழிப்பட்டு நின்று, இறைவனுடைய திருவடிப்பேற்றைப் பெறுதலாகிய ஏற்றத்தை அடையும்; உயர் நிலையைப் பெறும்' என்னும் உண்மையைக் கொடியேற்ற விழா குறிப்பிடுகின்றது. கொடி - ஆன்மா, ஏற்றம் - உயர்நிலை; எனவே 'கொடி ஏற்றம்' என்பதற்கு ஆன்மா பெத்த நிலையாகிய கீழ்நிலை ஒழிந்து, முத்தி நிலையாகிய மேல் நிலை அடைதல் எனப் பொருள்கொள்ளலாம்.

கொடி வேறொரு பற்றுக்கோட்டினுலும் மேல் உயர்ந்து ஏருமல், கொடிமரமே பற்றுக்கோடாக ஏறி நிற்றலானது, சிவனே குருவாய் வந்து அருளினல்லது வேறெவ்வாற்ருனும் ஆன்மா அவனை அடைய முடியாது என்பதைக் குறிப்பதாகும்.

இங்ஙனம் உட்பொருளை விளக்கி, ஆன்மாவை ஈடேற்றும் வண்ணம் இக்கொடியேற்று விழாவை நடாத்துகின்றேன் என்னும் பொருள் அமையுமாறு "கொடிகட்டினேன்" — கொடியை ஏற்றி (உயர்த்திக்) கட்டினேன் என்ருரென்க.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## ஸ்ரீ வில்லூன்றி வீரகத்தி விநாயகராலயத்தில் அபிஷேகமும் அர்ச்சனையும்

———0———

நிகழும் சோபகிருதுஞு மாசிமீ 4உ (16-2-64) ஞாயிற்றுக்கிழமை பகல ஸ்ரீ பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு மண்டலாபிஷேகமும் மாலை 6 மணியளவில் பஞ்சமுகார்ச்சனையும் உற்சவமும் நடைபெறும் என அறிகிருேம.

## டக்றர் எஸ். சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டி

சென்ற அறுபதாண்டுகளாக நமது நாட்டில் சிறந்த வைத்தியராகவும் தர்மவள்ளலாகவும் விளங்கிய டக்றர் S. சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டி 11-2-64 செவ்வாய்க்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. அன்னரின் பந்துககளும் அபிமானிகளும் மேற்படி நிகழ்ச்சியில் சிரததையுடன் பங்குபற்றினர்.

## திரு. சாம். ஏ. சபாபதி அவர்கள் காலமானுர்கள்

முன்னைநாள் மேயர் திரு. சாம். ஏ. சபாபதியவர்கள் தமது 85 வது வயதில், நேற்றுமுன்தினம் காலமானுர்கள். அவருக்கு மரியாதை செலுத்துமுகமாக நேற்று யாழ்ப்பாண மாநகரசபைக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஹூ மாசி மீ
உ௨ வெள்ளிக்கிழமை

## இனிப்பு மருந்துண்டு பாரீர்

'சுகாதாரம்' இம்மை அம்மை நல் வாழ்வுக்கு இன்றியமையாதது.

'சுத்தம் - சுகாதாரம்; அது சுகந்தரும்' என்பார்கள். அந்தச் சுகாதாரம் இருவேறு வகையான சுகத்தை நமக்குத் தர வேண்டும். ஒன்று உடற் சுகம்; மற்றது உயிர்ச் சுகம்.

உடலுக்குச் சுகந்தருஞ் சுகாதார விடயங்களைச் சரீர சாத்திர நூல் முதலியவற்றைக் கொண்டறிந்து அநுபவித்துச் 'சுகம் பேச' வாழலாம். இந்த 'உடற் சுகாதார' சுகம் இம்மைக்கு மாத்திரமேயாம். ஆனால், என்றும் நிலைபேறுடைய உயிர் இம்மை அம்மைகளிற் சுகித்து வாழ இந்நிலைபேறற்ற உடற் சுகாதாரம் பயன்படாது சரீர சாத்திர நூல் முதலியனவும் உதவா. ஆயின், உயிரின் சுகத்துக்கு — நிலைபேருன பேரின்பத்துக்கு ஆதாரமான நூல் வேறு ஒன்ருகத்தான் இருக்க வேண்டும். அதனைச் சைவ சித்தாந்தம் என்ப.

சைவசித்தாந்த உண்மைகள் உயிர்க்குறுதி பயக்கும் அருமருந்துகள்; சிவாதார மாத்திரைகள். அவற்றைச் சத்தாகத் தம் அகத்தே அடக்கிக்கொண்டு, அநுபவிக்குந் தோறும் இனித்துச் சுகஞ்செய்யும்படி நிற்பன சைவ புராணங்கள். அப்புராணங்களுள் மிக இனிப்பானது கந்தபுராணம்.

கந்தபுராணத்தினுலே தமிழும் சைவமும் ஓங்கி வளர்ந்த காலம் ஒன்று யாழ்ப்பாணத்தில் — ஈழத்தில இருந்தது. அது, நாவலர்ஐயா வாழ்ந்த காலம்; நல்லறிவுச் சுடர் பிரகாசித்தகாலம்.

அந்தக் காலத்தில், ஈழதேசம் எங்கும் உள்ள சிவாலயம் விக்கினேஸ்வராலயம் சுப்பிரமணியாலயம் எல்லாவற்றிலும் இக்கந்தபுராணம் வருஷந்தோறும் மூன்றுமாச காலம்வரை வாசித்துப் பொருள் சொல்லப்பட்டு வந்தது; இன்றும் அதன் திறமுணர்ந்த சைவச் சான்ருேரால் ஆலயங்களில் படித்துப் பயன் சொல்லப்பட்டு வருவது.

பால் இனித்துக்கொண்டு மருந்துமாவது போல, அத்தியற்புத அதிமதுரச் சுத்தச்செந்தமிழாகிய கந்தபுராணம், படிகுந்தோறும் பயனுரைகுந்தோறும் அதன் உட்கிடையாகிய சைவசித்தாந்தத்தை உய்த்துணருந்தோறும் தெவிட்டாமல இனித்துக்கொண்டே உயிர்நோய்க்கு மருந்தமாய் உதவுவது. அது, உயிர்க்குறுதி பயக்கும சைவசிந்தாந்தமாகிய பெருமருந்தைச் செந்தமிழாகிய இனிய பாலோடு அழவி உளங்களிகூர உதவுதலினுலே, ஆணவநோய் நீக்கததுக்கென்றுயாவராலும் விரும்பி உணணத்தக்கதோர் இனிப்பு மருந்தாக இருப்பது.

"இக்கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள், நோய்நீககம், செலவம், புத்திரபாககியம், சத்துருஜயம, இராசவசியம் முதலிய பயன்களைத் தாம தாம வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுஙகாலம் பலராலும் அநுபவத்தினுல் நிச்சயித்துரைககப்பட்ட விஷயம். இது சததியம! சததியம! மூககாலும சததியம!" என்று நாவலரையா அவர்கள் துணிவுபற்றிச் சத்தியஞ் செய்துரைததமை குறிப்பிடததக்கது.

இச் சிறப்புக்களெல்லாம் ஒருங்கமைந்த இனிப்பு மருந்தாகிய கந்தபுராணத்துக்கு விததுவான் ந சுப்பையபிள்ளை முதலிய சைவத் தமிழ்ப்பேரறிஞர்களது உரைகளைப் பெய்து, சைவநனமககள யாவரும அநுபவிககத் தககதாயப பதனட்டு உதவ முன்வநத சைவபரிபாலன சபையார், அணமையில அதன் முதற்ருெகுதியை வெளியிடவிருப்பது கேட்டு நாம மகிழச்சியடைகினறேம். நம மகிழச்சி நடுவாழவேண்டுமாலல சபையாரின இககற்ருெணடு குறைவினறி முறமுற வேணடும.

எண்ணித் துணிக கருமந்
துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு.

என்பவாதலால், வாய்மை நெறிசசேரும நமது சைவ பரிபாலனசபையார், எடுதத கருமததை இடையில நழுவவிடார் என்பூப, சைவாபிமானிகளாய பெரியார்கள் - தாதாககள யாவரும நல்லாதரவும் நிதியுதவியுஞ் செய்து தமிழுககும் சைவததுக்கும பெருநன்மை புரிந்து, இனிப்பு மருந்து உணடு தததஞ் சுகாதாரம பேணுவார்கள என எதிர்பார்க்கனறேம.

—0—

நேயர்கள் நெஞ்சம்

## சிவராத்திரிக்கு இருவேறு தினங்களும் உரியனவே

—0—

இந்துக்களால் அநுட்டிக்கப்படும் மகாபுண்ணிய விரதமாகிய மகாசிவராத்திரி இவ்வருடம் இருவேறு தினங்களில கொள்ளப்படுவதாக அறிகின்ருேம். ஒவ்வொரு தினத்திற்கும் சைவ சாத்திரங்களில் பிரமாணங்களை யாவராலும் மதிக்கப்படுகின்ற அறிஞர்கள் காட்டியிருக்கின்ருர்கள். தை மீ உகூ௨ (11-2-64)ம் மாசி மீ உகூ௨ (12-3-64)ம் அவர்களால் குறிக்கப்பட்ட திகதிகளாகும் இவ்விதமான அபிப்பிராயபேதம் நிலவும்பொழுது இருதினங்களிலும் முறையாக சிவராத்திரி விரதத்தை யனுட்டிப்பது உத்தமமாகும். சென்னையிலிருந்து வெளிவரும் இந்து என்னும் ஆங்கிலப் பத்திரிகையில், ஸ்ரீகாளத்தியில் இவ்வருடம மகாசிவராத்திரி இருதினங்களிலும் அநுட்டிப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருக்கின்றமை சிந்திக்கத் தக்கது. ஸ்ரீகாளத்தி தமிழ்நாட்டிலுள்ள புண்ணிய தலங்களிலொன்று. சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்று விலங்குகளாலும் பூசிக்கப்பட்ட தலமென்பதை தலபுராணங்களினுலறியக்கிடக்கின்றது. கண்ணப்பநாயனுர் வழிபாடு செய்து முத்தியடைந்த தலமும் ஆகும். அத்தலத்தில் 19 வருடங்களுககு ஒரு முறை பிரமோற்சவம் இரு தடவைகளில் நடத்துவது வழமையாகும். இவ்வருடம் அத்தலத்தில் பிரமோர்சவம் 8-2-64 தொடக்கம் 15-2-64 வரையும 8- -64 தொடக்கம் 12-2-64 வரையும நடைபெறுமாம். பிழையெனக் கருதப்படும் நாளிலும் மகாசிவராத்திரியைப் பகதியோடு அனுட்டிப்பதால் நன்மையே உண்டாகும்.

குறித்த நாட்களிலொன்று நெருங்கிவரும் காலத்தில் இவ்விவாதத்தை நீடிப்பது புத்தியல்ல சைவ சமயத்தின் சமயக்கொள்கைகளும பாரமபரியமும் எமது கூற்றை ஆதரிககுமெனக் கருதுகின்ருேம்,

சு. சிவசுப்பிரமணியம்
கொழும்பு
7—2—64.

x x x

## இப்படி ஏமாற்றலாமா

சென்ற வெள்ளிக்கிழமையன்று (7-2-1964) தங்களது பத்திரிகையில் வெளியாகிய கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் 29-1-64ல் கொடியேற்று விழாவும், 11-2-64-ல் இரதோற்சவமும் நடைபெறுவதாக அறிவித்திருந்தீர்கள். நாம் திருவிழாவிறகாகஒருநாள் ஷெ சிவன கோவிலுக்குப் போயிருந்தோம. ஆனுல் அவ்விடம கொடியேற்று வைபவமும், திருவிழாககளும இல்லாது இருநதமை கண்டு ஏமாற்றத்தோடு வீடு திரும்பினேம்.

நீங்கள் குறித்தபடியும், பஞ்சாங்கங்களில குறித்த படியும், அவர்கள் ஏன் திருவிழாக்களைச் செய்யவில்லை

தொடர்ச்சி 8-ம் பக்கம்

## அணிந்துரை அரங்கம்

நூல்:
'சைவ சமய அறிமுகம்'
ஆசிரியர்:
மாணிக்கவாசக ஞானதேசிகன் அவர்கள்
சிவராஜ யோக மடம்,
பூம்புகார்.
விலை: ரூபா. 1-50
பக்கங்கள்: 85.

இந்நூல் சிதம்பரம் மெய்கண்டார் தத்துவக்கழகத்தாரது முதல் வெளியீடாகும். இதனுசிரியர், அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சைவபரிபாலன சபையார் நடாத்திய சைவமகாநாட்டில் தலைமைவகித்த பெரியாரென்பது குறிப்பிடத்தக்கது.

'காழியர் தலைவன் கவுணியர் கோமா'னுக்கு உரிமையாகச் சமர்ப்பணஞ் செய்யப்பெற்ற இந்நூலில் சைவ சமய அறிமுகம், வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம், மெய்ப்பொருள் காண்பதறிவு - 1-2, பெரியபுராணத்திறவு, தவநெறி ஆகிய கட்டுரைகள் உள. சைவ சித்தாந்த நுண்பொருட்டிறனை அததுறையில் ஆரம்ப அறிவில்லாருங்கூட நன்கினிது விளங்கி நயக்குமாறு தெளிவான இனிய வசனநடையில் அக்கட்டுரைகள் அமைக்கப்பட்டமை, 'காலத்தாற்செய்த பெருநன்றி ஆகும்' என்று போற்றுதற்குரித்து.

'சைவசமய அறிமுகம்' என்னுங் கட்டுரையில் "மெய்ப்பொருளாராய்ச்சி, ஆன்மா அடையவேண்டிய உயர்நிலை, முத்தியடைதற்குரிய மார்க்கங்கள், அம்மார்க்கங்களில் நின்று நிருபித்துக்காட்டிய தலைவர்கள்" ஆகிய நான்கு விடயப் பாகுபாடுகளையும விளக்கி அசைக்க முடியாத நான்கு தூண்களாக நிறுத்திக்கொணடு, சைவசமயம் எனனும மண்டபத்தை அமைதது அறிமுகஞ் செய்த ஆசிரியர்கள், அம் மண்டபத்திருந்து நுகர்ந்து உயிர்க்கு உறுதிதேடும்படி ஏனைய ஐந்து கட்டுரைகளையும் பஞ்சாமிர்தமாகத் தந்து உபசரித்திருக்கிருர்கள்,

இரண்டாவது கட்டுரை 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' என்பது. வேத உபநிடத முடிபாகிய சிவாகமங்களிற் கூறப்பட்ட ஞானபாதப் பொருளே சைவசித்தாந்தமாக, அச்சித்தாந்தத்தை விளக்கும் நூல்கள் பதினன்கனுள் சிவப்பிரகாசம் நுதலிய பொருள்பற்றிய பாடல் நுணுக்கத்தை அறிவிப்பான் புகுந்த ஆசிரியரவர்கள் சிவஞானசித்தியார் நெஞ்சுவிடுதூது, சங்கற்ப நிராகரணம் திருமந்திரம தாயுமானவர் பாடல் ஆகியவற்றிலிருந்து மேறகோள் காட்டி விளக்கி, "வேதாந்தத்தெளிவாம் சைவ சித்தாந்தம" என்னும் தொடரின் உட்கிடையை இக்கட்டுரையிற் புலப்படுததியுள்ளார்கள்.

இறைவனுக்கு வேருய் ஆனமாக்கள் என்று ஒரு பண்டம் இல்லை; சட்டி பானைகள்தோறும் பகுதி பகுதியாகக் கிடக்கும் ஆகாயம் அவை உடைந்தவிடத்து ஒன்ருகி ஏகம் ஆகாயமாய்க் காட்சியளித்தல்போல, மாயையினுல் தான் சிருட்டித்த உடம்புகள் தோறும் பிரமமே பலவாய்ப் புகுந்து இருந்து விளையாடி இற்றில் ஏகம் ஆகும் என்று புறச் சமயமாகிய ஏகான்மவாதம் பேசும், இந்த ஏகான்மவாதிகள் ஆகிய பரமாத்துமாவை இந்தச் சடம் ஆகிய மாயை அகப்படுத்திச் சீவாத்துமாக்களாக்கி விடுகின்றதே! மாயைக்கு இவ்வளவு கெட்டிததனமா? அவர்கள் கூறும் அந்தப் பரமாத்துமாவுக்கே பெரிய வெட்கம்! வெட்கம்! இனி, 'நான் பிரமம்' என்று 'அகப்பிரமங்'கொண்டு திரியும் இவர் எந்த அநியாயமும் செய்யலாமன்றே! - இவரைக் கண்டிக்க வேருெரு தெய்வம் யாண்டுமில்லையே! "கொலையொடு களவு காமம் குறித்திடு வஞ்சமெல்லாம் நிலையெனப்புரியலாமே." இப்படிப் படுகுழியில் விழுத்தப்பார்க்கும "நான் பிரமம என்பவர் பால் நண்ணுதே" வாழ நமக்கு இரண்டு கட்டுரைகள் இந்நூலில் அடுத்துத்தரப்பட்டுள. அவற்றுள் முதற் கட்டுரை ஏகான்மவாதக் கொள்கைகளை எடுத்துக்கூறுவது; மற்றது அக்கொள்கைகள் எங்ஙனம் பொருந்தாதென்பதைத் தருக்க நியாயத்தோடு தெளியவைப்பது.

பெரிய புராணம் சைவ சித்தாந்தப்பயனை அடியாரது வாழ்க்கை வரலாறுகள்மூலம யாவர்க்கும் சுவைபடவுரைக்கும் ஒப்பற்ற நூல் என்பதைப் 'பெரியபுராணத்திறவு' என்றகட்டுரைமூலம ஆசிரியரவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

தவநெறி என்னும் கட்டுரையில் தவத்தின் அவசியம், அதன் பெருமை, அதன் தன்மை, சிவஞானபோதமும் தவமும், அறமுந் தவமும், பாவமாகிய தவம் என்பன பல மேற்கோள்கள் காட்டி ஆராய்ந்து விளக்கப்பட்டுள.

இந்நூலில் எடுத்தாளப்பெற்ற ஆங்கிலச் சொற்ருெடர்களுக்குரிய தமிழ் மொழிபெயர்ப்பும் தரப்பட்டிருப்பின் அம்மொழி அறியார்க்கு மிகவும் பயனுடையதாயிருந்திருக்கும், ஈழத்துச் சைவநன்மக்கள் - சிறப்பாகச் சைவசித்தாந்தங் கற்கப்புகும் மாணவர்கள் எமது அரசியலாரின் தாட்சணியம் மிக்க அனுமதிகொண்டு இந்நூலை அரிதிற்பெற்ருயினும் கற்க வேண்டியது இன்றியமையாததென்பது அடியேனின் தாழ்மையான அபிப்பிராயம்.

நூல் கிடைக்குமிடம்:
மௌன சுவாமிகள் மடம்,
சபாநாயகர் தெரு
சிதம்பரம்.

— 'சிறுவை இமாச்'

## மகாசிவராத்திரி உற்சவ விழா

சோபகிருது ஹூ தை மீ 29 உ மேற்படி விழா நல்லூர் தேவஸ்தான மண்டபத்தில் அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்கத்தாரால் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த...
## கொடிக்கவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### நேரிசை வெண்பா

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியே திரவே — தருளாளா
நீ புரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கோடி. 2.

கொண்டுகூட்டு: அருளாளா, "பொருள்(களிலே) ஆம் பொருள் ஏது?" (எனவும்), "போது ஏது?" (எனவும்), "கண் ஏது?" (எனவும்), "இருள் ஆம் வெளி ஏது?" (எனவும்), "இரவு ஏது?" (எனவும் வினுவுவார்க்கு அவற்றது உண்மைகூறி நிறுவுகற் பொருட்டும்) நீ புரவா வையம் எ(ல்)லாம் (அவ்வுண்மையை) அறிய (வைத்கற்பொருட்டும்), நீ அறிய, (நான்) கோபுர வாச(லி)ல் கொடிகட்டினேன்.

அருஞ்சொற் பொருள்: பொருள் ஆம் பொருள் - சிவம் (அது, பொருள்களுக்குள்ளே சிறந்ததும் அழிவற்றதுமான பொருள்) போது-சத்தி (போது-சூரியன்; சூரியன் அதன் குணமாகிய கிரணத்துக்கு ஆகுபெயராய் நின்று, உவமைமுகத்தால் சத்தியை விளக்கிற்று.) கண் - ஆன்மா (கண் தன் ஒத்த இயல்புகளால் உவமையாய் ஆன்மாவைக் குறித்தது.

பொருள்: உயிர்களிடத்துப் பெருங்கருணையுடைய இறைவனே, பொருள்களுக்குள்ளே அழிவின்றி என்றும் நிலைபேறுடைய சிறந்த பொருளாகிய "சிவம் யாது?" எனவும், கிரணம்போல்வதாகிய "சத்தி யாது?" எனவும்; (சூரிய கிரணம் ஆதாரமாகத் தன் பார்க்குஞ் சத்தி கொண்டு சூரியனை அறியும்) கண்ணைப்போன்ற "ஆன்மா யாது?" எனவும், அஞ்ஞானந்தரும் "சகலம் யாது?" எனவும், அவ்வஞ்ஞானம மிக்குடைய "கேவலம் யாது?" எனவும் வினுவுவார்க்கு, அவற்றது உண்மை கூறி நிறுவுதற்பொருட்டும், தேவரீர் பொருந்தி ஆண்டருளும் உலகத்தாரனைவருக்கும் அவ்வுண்மையை அறியவைத்தற்பொருட்டும், தேவரீரே சாட்சியாகத் (தேவரீர் கலந்து புரந்து நின்ற வையமுஞ் சாட்சியாக நான் சத்தியஞ் செய்து) திருக்கோபுர வாசலிலே கொடியை (உயர்த்தி)க் கட்டினேன்.

பொருளாம் பொருளேது என்றற்றொடக்கத்து வினக்களெல்லாம் மறுப்புப்பொருள் எனக்கொண்டு, "சிறந்த பொருளென்று கூறப்படும் சிவம் (ஏது?) இல்லை; கிரணம்போன்றது என்று கூறப்படும் சத்தி (ஏது?) இல்லை; கண்போன்றது எனப்பட்ட ஆன்மா (ஏது?) இல்லை; அஞ்சானந்தருமியல்பினதென்ற சகலம் (ஏது?) இல்லை; அவ்வஞ்ஞானம் மிக்கதெனப்பட்ட கேவலம் (ஏது?) இல்லை; என்று கூறும் உலகாயதருக்கு அவை யாவும் உள் பொருள்களே என்று நிறுவுதற் பொருட்டும்" எனப் பொருளுரைப்பினும் அமையும். உலகாயதருக்குப் பிரத்தியட்சப் பிரமாணமாகக்காணும் உலகத்தையே சாட்சியாக வைத்து சிவம் முதலியவற்றினுண்மை நிருபிக்கப்பட வேண்டுமாதலின் அதற்கியைய, 'நீ புரவா வையம் எலாம் அறிய' என்பதை இரட்டுற மொழிந்து, அத்தொடருக்கு "தேவரீர் கலந்து நின்று ஆண்டருளும் உலகம் சாட்சியாக (அவை யாவும உள் பொருள்களே என்று நிறுவுதற்கும்) எனவும் பொருள்கொள்க.

குறிப்பு:—

1. பொருளாம் பொருள்:-

பொருள்களுக்குள்ளே சிறந்ததும் அழியாததுமான பொருளைச் செம்பொருள் எனவும் மெய்ப்பொருள் எனவும கூறுப.

"அப்பொருள் பசு பாசங்கள் எல்லாவற்றுக்கும் மேலான பொருள்" எனவும்; "அது அருவமும உருவமும் அல்லாததாய், குணம் குறிகள் இல்லாததாய், மலபந்தமற்றதாய். ஒரே பொருளாய், அழிவற்றதாய, அளவற்ற உயிர்களுடைய அறிவுக்கு அறிவாய் விருப்பு வெறுப்பு என்னும் மாறுபட்ட தன்மைகளைப் பொருந்தாததாய், கண்டிக்கப்படாததாய், ஆனந்தமே உருவமாய், பாசஞான பசுஞானஙகளால் அறிந்து சொல்லுவதற்கு அரியதாய், பதிஞானம் ஒன்றினலே மாத்திரம சென்று அடையத்தக்க முத்தி நிலையாய், பெரிய பொருளினும் பெரியதாய், சிறிய பொருளினும் சிறியதாய் விளங்குவது" என்வும்; "(அது) சிவம் எனப்படும்" எனவும் சிவப்பிரகாசம் உரைக்கும்:-

பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
பகிபசுபா சந்தெரித்தல் பதிபரமே யதுதான்
நிலவுமரு வுருவன்றிக் குணங்குறிக ளின்றி
நின்மலமா யேகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி யசல மாகி
யகண்டிதமா யானந்த வுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்துளோரே.

—சிவப்.

இச்சிவம் ஆன்மாக்களுக்கு உள்ளும் புறமும் பற்றுக்கோடாக நின்று என்றும் நிலைத்த பேரின்பத்தை உதவுவதால் தனக்கு ஒப்பும் உயர்வும் அற்றது; எனினும் ஈண்டு அதற்கு ஒருபுடை ஒப்பாகச் சூரியனைப் பொருத்தி உணர்தலேறபுடைத்து.

—தொடரும்

## சைவம் வளர்த்த
## செந்தமிழ்ப் பிரசங்கசிங்கம்

★

இராகம்: செஞ்சுருட்டி :: தாளம்: ஆதி.

பல்லவி

ஆறுமுக நாவலர்போலே அவதாரம் இல்லை இனிமேலே

அநுபல்லவி

அரனது திருவடி அனுதினந் துதித்திடும் (ஆறுமுக)

சரணம்

1 சாஸ்திரம் பலபல பயின்றேன்
சைவ சமயமே சிறந்திட முயன்றேன்
தோத்திரத் தொகையினுல் நயந்தோன்
தொண்டு செய்யாமல் இருக்கவே பயந்தோன் (ஆறுமுக)

2 ஜெகம் மெச்சும் தமிழ்ப்பிர சங்கம் — தினம்
செய்திடும் செந்தமிழ்ச் சிங்கம்
அவனியில் அரும்பெருஞ் சங்கம்
அனலிலே புடமிட்ட தங்கம் — (ஆறுமுக)

தொகையரு

சீவகாருணியமே சிந்தையில் குடிகொண்ட
தெய்வீக புருஷ சீலன்
சீராகச் சிவபூசை செய்திடுந் தெய்வ
சித்த வைராக்கிய தீரன்.

பாட்டு

இயல் இசை நாடக மிதமுறு தோத்திர
இன்ப முறு யாழ்ப்பாண செந்தமிழ் சேத்திர (ஆறுமுக)

—பண்டிதர். கெ. மாசிலாமணிப்பிள்ளை
தலையாளி, கொக்குவில்.

குறிப்பு:- இக்கீர்த்தனை இருபது ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பெற்றுச் சங்கீதக் கச்சேரிகளிற் பாடப்பெற்று வந்தது. இதனை இந்துசாதனத்துக்கு வண்ணை சங்கித வித்துவான் திரு வா. இரத்தினம் அவர்கள் மூலம் அவரிடம் பெற்று உபகரித்தவர் அராலி தெற்குச் சைவப் பிரசாரகர் திரு. வே. கந்தையா அவர்கள்.

இவ்வாரம் 17-2-64 — 23-2-64

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பழம் முதலீடுகளால் நற்பலன்; நிலபுல இலாபம் நிச்சயம். அதிக செலவும் சிறு சுகவீனங்களும் உண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

புதுமுதலீடுகளில் வெற்றி நிச்சயம், எதிரிகளுக்கு இடையூறும் உமக்குப் புகழும்உண்டாம். தம்பி தங்கையர் மிக உதவுவர்.

**துனராசி** மிருகசீரிடம், 2 3,4, ருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

சிறு சுகவீனங்கள் உண்டாம். உமது விவகாரங்களில் மெல்ல முன்னேறுவீர். சொந்தப் பிரச்சினை தீர்வுறும், பண இலாபம் உண்டாம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

அலுவலகதில் சில சச்சரவுகளுண்டாம். புது முயற்சிகள் தடக்கல்படும். சிறு விபத்துகள் உண்டாம். பணமளவில் ஓரளவு நல்லவாரம்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்த ம் 1-ம் பாதம்.

முதலிருநாட்களும் எச்சரிக்கை வசைபரப்புவோர் பற்றிக கவனமாக நடந்துகொள்க. குடும்பத் தகராறுகளுண்டாம். எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

போட்டியாளரை வெல்வீர் எதிரிகளுக்கு இடையூறும் உமக்குப் புகழு நிச்சயம தொழில் வெற்றியும் உண்டாம். செவ் [illegible] எச்சரிக்கை.

**துலாம்,** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

குழப்பமான வாரம், செலவைச் சமாளித்தல் கடினமாகும். வயிற்றுக் கோளாறுண்டாம். வியாழன் வெள்ளி சனிகாலை எச்சரிக்கை.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இனத்தவருடன் மோதலுக்கு இடமுண்டு. வாகனங்களால் தொல்லையுண்டாம். பணமளவில் நல்ல வாரம். வார இறுதிநாள் எச்சரிக்கை.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலை ஊறுபடும். நிலபுல இலாபம் நிச்சயம். நண்பர்கள் இடரிலிருந்துங் காப்பர். விவசாய ஈடுபாட்டில் வெற்றி உண்டாம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

சண்டைகளில் முந்தி நிற்பீர். கண்டனங்களுக்கு இடமுண்டு. நண்பர்களை அதிகம் நம்பமுடியாமல் இருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

நிம்மதி இருக்காது உடல்நிலையும் திருப்தியாயிருக்காது. பணமளவில் நல்ல வாரம். புகழும் சமூக வெற்றியும் உண்டாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

செலவுகள் பெருகும். புது முயற்சிகள் தடங்கல்படும். அதிகமாக உழைக்கவேண்டி இருக்கும். சிறு சுகவீனங்களும் கண்ணோயும் உண்டாம்.

### யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபா

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் பொதுக் கூட்டம் 9-2-64 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் சங்கத் தலைவர் திரு சு.பொ கந்தையா அவர்கள் தலைமையில் வண்ணை அரசடி விநாயகராலய வீதியிலுள்ள மேற்படி சபாவின் சங்கீத கலாசாலைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

அத்தருணம் சைவப்பெரியாரும் முடிக்குரிய வழக்கறிஞருமான திரு த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் சபாவின் போஷகராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். புதுவருட நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு சு. பொ. கந்தையா, உபதலைவர்கள் திருவாளர்கள் சி. செல்லத்துரை, கே. சபாரத்தினம், காரியதரிசி திரு. சி கந்தமூர்த்தி, உப காரியதரிசி திரு. எஸ். கந்தையா, தனாதிகாரி திரு. கே. வி. தம்பு, உபதனாதிகாரி, திரு. வி பி சண்முகநாதன் திருவாளர்கள் ஆர் சி. மன்மதராயன், எஸ் நமசிவாயம், ஆர். லோகநாதன், கே. கோவிந்தபிள்ளை, வி சின்னத்தம்பி, கே. உலகநாதன், கே. சித்திவிநாயகம், கே அரியராசா, ஏ. வெற்றிவேலு, எம் சுப்பிரமணியம் ஆகியோரைக்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

சபாவினுல்நடத்தப்பெற்று வரும சங்கீத கலாசாலையின் வளர்ச்சிபற்றிப் பலரும் பாராட்டிப் பேசினர்.

### ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பும்

சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் 9-ம் ஆண்டு நிறைவுவிழாவும் பரிசளிப்பும் நிகழும் சோபகிருது வருடம் மாசி மாதம் 4-ந்திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பாண அரசாங்க உதவி-அதிபர் திரு. A. பெருமையினுர் அவர்கள் தலைமையில். ஆரம்பமாகும் எனவும் இவ்விழாவில்செல்வி ராதா சோமசுந்தரம் B. A. (Econ) அவர்கள் மாங்கனி பெற்ற மங்கை என்னும் பொருள்பற்றிக் கதாப்பிரசங்கஞ் செய்வார்களெனவும் அறிகிறோம்.

### பாதயாத்திரை

சோபகிருது ஞூ தை மீ 29-ந் உ, நல்லூர் பஜனைச் சபையாரால் பஜனைப் பாதயாத்திரையொன்று நடாத்தப்பெற்றது. இந்தயாத்திரை நல்லூர் தேவஸ்தானத்தில் ஆரம்பமாகிக் கீரிமலையை அடைந்து நிறைவுற்றது.

### இப்படி ஏமாற்றலாமா?

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

என்பதைத் தங்கள் பத்திரிகை மூலம் எமக்கு அறிவித்தால் பேருதவியாக விருக்கும்.

இப்படிக்கு
தங்கள் பத்திரிகை
அபிமானி

ஆசிரியர் குறிப்பு:-

இந்நேயர் குறிப்பிட்ட பிரகாரம் விழாககள் நடைபெறுமையை அறிந்து நாமும் வருந்துகின்றோம். கட்டுரையாளர் பஞ்சாங்கத்தைத் துணைகொண்டே அங்ஙனம் திகதி குறிப்பிட்டார் போலும், தேதியைக் குறிப்பித்துக் குறிப்பிததவண்ணம் விழாக்களை நடத்தாதிருக்கும் கோயிற்றருமகர்த்தாககளும் அவர்களை நம்பிக் கட்டுரை எழுதும் பெரியார்களும் இவ்வித பிழைகள் நேராவண்ணம் பாதுகாப்பார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு
வழக்கு இல. 7392
வழக்காளி தாமு வேலுப்பிள்ளை
அல்வாய் வடக்கு
எதிராக:
சிதம்பரப்பிள்ளை மாணிக்கம்
அல்வாய் மேற்கு

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டார் எனக்கு அனுபபிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்க்காட்டப்படும் ஆதனம 1964-ம்ஆ பங்குனிமீ ௨௰௨ (26-3-1964) வியாழக்கிழமை மூற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக விருந்து என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன டாப்பு:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவெளிக் கோயிற் பற்று மணிவீரபாகுதேவன் குறிச்சி இறை அல்வாய் "கலக தொல்லை" நில. பர. 8¼ இதற்கு எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை கைம்பெண் இலட்சுமிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், வடக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கு குமாரர் ஆறுமுகத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகளும் வடலியும் யாவற்றிலும் சொரியலாய் 2/9 பங்கு,

2. ஷை இறை "கூன் வேலந்தெணி" நில.பர. 23 7/8, இதற்கு எல்லை கிழக்கு அல்வாப்பிள்ளை பெண் கண்ணகை, வடக்கு முருகர் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு கணபதியார் சண்முகமும் மறுபேருக்குமுடைய ஆதனம் தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகளும் வடலியும் யாவற்றிலும் சொரியலாய் 1/8 பங்கு.

3. ஷை மளவராய குறிச்சி "இம்பிலாணை" நில. பர. 3¼ இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கந்தன் ஏரம்பனுக்கு உடைய ஆதனம். மேற்கும் தெற்கும் கணபதியார் சண்முகத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைமரம் மற்றும் யாவற்றிலும் சொரியலாய் ½ பங்கு.

4. ஷை மளவராய குறிச்சி "மூன்னையர்சீமா" நில. பர 8¼ இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை. வடக்கு பெரியன் முருகனுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு கணபதியார் சண்முகத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைமரங்கள் யாவற்றிலும் சொரியலாய் ¼ பங்கு.

| | |
|---|---|
| தீர்வைத்தொகை | 1240-00 |
| வட்டி 1000-க்கு 21-4-1962 ல் இருந்து 17-1-1963 வரை 8 வீதப்படி | 60-00 |
| 5 வீதப்படி 1300-க்கு 17-1-63 ல் இருந்து 16-7-63 வரை | 32-50 |
| கோட்டுச் செலவு | 203-40 |
| மொத்தம் | 1535-90 |

கா. முத்துக்குமாருஜயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales& Valuer
சந்திவேல்,
பருத்தித்துறை. 20-1-64
M 275 7-2-64

---

### கோட்டு விற்னவு விளம்பரம்

இல- M.B, 4947
மவுண் காமல் ரேட்,
யாழ்ப்பாணம்
1. ஜோன் அலக்ஜான்டர்பெண்
2, அங்கிளினு —வழக்காளி
எதிராக
பீச்ரோட், யாழ்ப்பாணம்
அந்தோனிப்பிள்ளை அந்திரிசு
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 4947-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1964-ம் ஹு பங்குனிமீ 28-ம் உ சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1575-ம், 21 - 7 - 62 தொடக்கம் 21-3-63 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 125/97½ சதம்

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை, "குடியிருப்புவளவு" பேச் செஸ 3 187/600, இதற்குரிய கல் வீடும் கிணறும். எல்லை கிழக்கு அந்தோனிப்பிள்ளை பெண விகரோறியாவினுதனம், வடக்கு சிமியான்தியோகுவுக்கும் பெண் விகரோறியாவுக்கும் உரிய ஆதனம், மேற்கு அந்தோனிப்பிள்ளை ஆரோக்கியநாதரின் ஆதனம், தெறகு ரோட்டு. இதற்குள்ளிருக்கும் கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்துப் புறநீங்கலாக இதடங்கலும். இதற்குட்பட்டவைகளினதைச் சேர்ந்தவைகளும், இன்னும் மேற்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் கக்கூசுப் பாவிக்கும் உரித்தும். அதற்குப் போகும் வழியுரித்தும்.

வே கோபாலபிள்ளை,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.
22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 3-2-64.
M 279 14-2-64.

---

### தெவிட்டாது தித்திக்கும் திருவருள்

1-ம பக்கத் தொடர்ச்சி

…ச் சுவைத்தனர் எனக் கொள்ளக்கிடக்கின்றது.

சொல்லொணுததாய், நினைத்தற்கும் அரிதாய், காண்டற்குந் தீண்டற்கும் எட்டாததாய், நுகாவற்கும் உண்மையதாய், குன்றுதல் இல்லாததாய், என்றும்உள்ளதாய், குறைவில் நிறைவாயுள்ள பேரின்பமாய சிவபெருமானது தாள்களை எம்மை வாழ்விக்கும்படி வாழ்த்தி, எம துன்பமெல்லாவற்றையும் அவர் நீக்கியருளத், தித்திக்குந் தேனுய பேரின்பத்தைப் பெற்று உய்ய உயர்நெறிப்பட்டு வாழுவோமாக.

---

### பகிரங்க ஏல விற்பனவு

பிரிவிடுதல் வழக்கு இல. 495
வழக்காளி:
ஆ, மகாலிங்கம் கைம்பெண் செல்லம்மா
—கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
எதிரிகள்:
1. முத்து சுப்பிரமணியம்
—வண்ணார்பண்ணை வடமேற்கு.
2 வீரவாகு இராசதுரை
பெண் மகாதேவி
3, வீரவாகு இராசதுரை
—வண்ணார்பண்ணை கிழக்கு,
யாழ்ப்பாணம்,
தற்பொழுது.
இல, 21 டீ கிறெற்சர் பிளேஸ்
கொழும்பு.

யாழ்ப்பாணம் பெரியகோட்டில் ஏற்பட்ட பிரிவிடுதல் வழக்கின் (இல. 495) படி வண்ணார்பண்ணை வடமேற்கு இறை யாழ்ப்பாணம் புத்தன் வளவு என்று செல்லப்படும் காணி நில பர 1 குளி ¾. எனது அளவைப் படத்தின்படி (இல, 1873 / 4-11-61) 1964 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 15ஆம் திகதி காலை 9 மணியளவில் முதல் பங்காளிகட்குள் ஏலத்தில் விற்கப்படும், பங்காளிகள் கேட்காவிட்டால் அதே நேரத்தில் ஏனையோருக்கு விற்கப்படும்:

வழக்காளிக்கு பர.1 குளி 3/4-ல் அரைவாசி, முதலாம் எதிரிக்கு அரைவாசி, வழக்காளியின் பங்கு இரண்டாம் எதிரிக்கு உடைய ஈட்டுக்கு அமைவாக,

எல்லை கிழக்கு ஆ. மகாலிங்கம் கைம்பெண் செல்லம்மாவும், முத்து சுப்பிரமணியமும், அ. எம்பெருமான பெண் இராசலட்சுமியும, செல்லத்துரை காசிநாதரும் இவர்களின் ஆதனமும்,

வடக்கு ஒழுங்கை.

மேற்கு ஆ. மாணிக்கவாசகர் பெண் செல்லம்மாவின் ஆதனம்.

தெறகு ஆ மகாலிங்கம் பெண் செல்லம்மாவின் ஆதனமும், முத்து சுப்பிரமணியத்தின் ஆதனமு, முருகேசு முத்துவேலுவின் ஆதனமும.

சி. முத்துக்குமாரசாமி,
உத்தரவு பெற்ற கொம்மிஷனர்.
மானிப்பாய், 12-2 64,
M. 286 14-2-64.

---


உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற
**பவுண், வைர ஆபரணங்களுக்கு**
சிறந்த இடம்:
# எஸ். கே. எஸ்.
## "தங்க மாளிகை"
கன்னுதிட்டி, :: யாழ்ப்பாணம்.
போன்: 281. தந்தி: ஜுவல்லர்ஸ்.


---

### பகிரங்க ஏல விற்பனவு

பிரிவிடுதல் வழக்கு இலக்கம் 494
வழக்காளி:
ஆறுமுகம் மகாலிங்கம் கைம்பெண் செல்லம்மா,
—கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
எதிரிகள்:
1, முத்து சுப்பிரமணியம்
—வண்ணார்பண்ணை வடமேற்கு
யாழ்ப்பாணம்
2, K, பொன்னையா பெண்
சரஸ்வதி
3. K, பொன்னையா,
—வண்ணார்பண்ணை கிழக்கு
யாழ்ப்பாணம்
4. வீரவாகு இராசதுரை
பெண் மகாதேவி
5. வீரவாகு இராசதுரை
வண்ணார்பண்ணை கிழக்கு,
யாழ்ப்பாணம்
தற்பொழுது,
இல. 21, டீ, கிறெற்சர் பிளேஸ்
கொழும்பு

யாழ்ப்பாணம் பெரியகோட்டில் ஏற்பட்ட பிரிவிடுதல் வழக்கின் (இல 494)படி வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை புத்தன் வளவு என்று சொல்லப்படும் காணி நில.பர, 1 குளி 15¾. கிணற்றுப்பங்கு, பயிர்வகைகள் உட்பட எனது அளவைப்படத்தின் (இல. 1872 / 4-11-61) படி 1964 ஆம் ஆண்டு பங்குனி மாசம் 15-ம் திகதி காலை 8-30 மணியளவில் முதல் பங்காளிகட்குள் ஏலத்தில் விற்கப்படும்; பங்காளிகள் கேட்காவிட்டால் அதே நேரத்தில் ஏனையோருக்கு விற்கப்படும்.

வழக்காளிக்கு நில. பர, 1 குளி 15¾ இல் அரைவாசி இரண்டாம் எதிரிக்கு மிகுதி அரைவாசி. வழக்காளியினதும் இரண்டாம் எதிரியினதும் பங்குகளைத் திருப்பி வாங்கும் உரிமை 1 ஆம் எதிரிக்கு அமைவாக.

எல்லை கிழக்கு முருகேசு முத்துவேலுவின் ஆதனம்,

வடக்கு ஆ மகாலிங்கம் கைம்பெண் செல்லம்மாவினதும், மாணிக்கவாசகர் பெண் செல்லம்மாவின் ஆதனமும், மறுபேரின் ஆதனமும்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M, B. 4941

நல்லதம்பி துரைசாமி
வாட் நம்பர் 11,
புங்குடுதீவு கிழக்கு
—வழக்காளி
எதிராக
1. சோமசுந்தரம் காராளபிள்ளையும்
2. பெண் வள்ளியம்மை இருவரும், புங்குடுதீவு கிழக்கு
—எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4941-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணி 1964 ஹு பங்குனிமீ 7௨ (7-3-64) சனிக்கிழமை முற்பகல் 10½ மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 4231-ம். இதற்கு ரூபா 2135-க்கு 19 - 7 - 62 தீர்வைத் திகதி தொடக்கம் 13-5-63 வரை 100-க்கு 18 வீத வட்டியையும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 13 - 9 - 63 திகதி தொடக்கம் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு 275-72.

காணி விபரம்;

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோயிற்பற்று புங்குடுதீவு கிழக்கு இறை மதறப்பத்துக் குடியிருப்பு விடுசிலமும் மதறப்பத்தும் பரப்பு நில லாச்சம் 25,

---

மேற்கு நாகமணி அப்பாத்துரையின் ஆதனம்,
தெற்கு தம்பு பெண் தங்கம்மாவின் ஆதனம்,

சி. முத்துக்குமாரசாமி
உத்தரவுபெற்ற கொம்மிஷனர்.
மானிப்பாய், 12-2-64.
M 285 14-2-64

---


யாழ்ப்பாணம்
## ஐக்கிய இலாபநிதி
**1918-ம் ஆ ஸ்தாபிதமானது**

**100 ரூபா விகிதமான 5000 பங்குகள்**
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,
சேமிப்புப் பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.
கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.
S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14.


---

### பகிரங்க ஏல விற்பனவு

பிரிவிடுதல் வழக்கு இல. 496
வழக்காளி:
ஆ. மகாலிங்கம் கைம்பெண் செல்லம்மா
—கந்தர்மடம் யாழ்ப்பாணம்
எதிரிகள்:
1. அருள்பிரகாசம் எம்பெருமான்
2. பெண் இராசலட்சுமி,
—வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
3 வீரவாகு இராசதுரை
பெண் மகாதேவி
4, வீரவாகு இராசதுரை,
—பம்பலப்பிட்டி, தற்பொழுது
வண்ணார்பண்ணை கிழக்கு,
யாழ்ப்பாணம்.
5. முத்து சுப்பிரமணியம்
—வண்ணார்பண்ணை மேற்கு
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் பெரியகோட்டில் ஏற்பட்ட பிரிவிடுதல் வழக்கின் (இல. 496)படி வண்ணார்பண்ணை வடமேற்கு இறை, யாழ்ப்பாணம் புத்தன் வளவு என்று சொல்லப்படும் காணி கல்வீடும் கிணறும், கிணற்றுப்பங்கும் பிரயோசனங்களும் உட்பட நில. பர. 3 குளி 6 3/4. எனது அளவைப் படத்தின்படி (இல. 1874 / 4-11-61) 1964ஆம் ஆண்டு பங்குனி மாதம் 15ஆம் திகதி காலை 9-30 மணியளவில் முதல் பங்காளிகட்குள் ஏலத்தில் விற்கப்படும், பங்காளிகள் கேட்காவிட்டால் அதே நேரத்தில் ஏனையோருக்கு விற்கப்படும்.

வழக்காளிக்கு நில: பர. 3, குளி 6 3/4 லில் அரைவாசி இப்பங்கு 3 ஆம் எதிரிக்கு வைத்த ஈட்டுக்கு அமைவாக, இரண்டாம் எதிரிக்கு அரைவாசி.

எல்லை கிழக்கு ரோட்டு.
வடக்கு ஒழுங்கை,
மேற்கு முத்து சுப்பிரமணியமும் பங்காளரின் ஆதனமும்.
தெற்கு செல்லத்துரை காசிநாதரின் ஆதனம்,

சி. முத்துக்குமாரசாமி,
உத்தரவுபெற்ற கொம்மிஷனர்.
மானிப்பாய், 12-2-64.
M. 284 14-2-64.

---

வான்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு தம்பையா பெண் பொன்னம்மாவுக்கும் எதிரிகளுக்கும் சோமசுந்தரம் பெண் சின்னம்மாவுக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு முதலாம் எதிரிக்கு உரிய ஆதனம். மேற்கு முத்துவேலு பெண் சின்னம்மாவின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு தில்லையம்பலம் வேலுப்பிள்ளையின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். இது அடங்கலும்.

2, மேற்படி இறை கன்னியர் கொண்டிப்பூ பரப்பு நெல்லுலாச்சம் 8-ம், பரப்பு நெல்லுலாச்சம் 4-ம், தற்சமயம் ஒரே துண்டாக பரப்பு நெல்லுலாச்சம் 12. இதற்கு எல்லை கிழக்கு கந்தர் குழந்தைவேலுவின் ஆதனம், வடக்கு கந்தையா கணவதிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு ரகுநாதர் காத்திகேசுவின் ஆதனம், தெற்கு சின்னத்தம்பி சின்னத்துரைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம்.

3, மேற்படி இறை கன்னியர் கொண்டிப்பூபரப்பு நெல் இலாச்சம் 25-ம் 8½ குழியும். இதற்கு எல்லை கிழக்கு தம்பையா பெண் வள்ளிக்குட்டிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம், வடக்கு முருகேசு சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம், மேற்கு கயிலநாத குருக்கள் பெண் யோகாம்பி அம்மாவுக்குரிய ஆதனம், தெற்கு கந்தையா கணவதிப்பிள்ளைக்குரிய ஆதனம். இது அடங்கலும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
(உத்தரவு பெற்ற ஏலதாரரும்)
விதாணை வளவு
சித்தன்கேணி, 23-1-63.
M. 282 14-2-64.

---

**மாணவர் பகுதி**
**இடமின்மையால்**
**வெளிவரவில்லை**

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் யாழ்ப்பாணம் … வண்ணவீதி, 2ம் ஒழுங்கை. 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 14-2-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org